பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**08 11 2025 SATURDAY 7.15 PM**

ஆகாஷவாணி

***தலைப்புச் செய்திகள்***

1. குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, அங்கோலா மற்றும் போட்ஸ்வானா நாடுகளுக்கு ஆறுநாள் அரசு முறைப்பயணமாக இன்று புறப்பட்டுச் சென்றார்.

2. கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை பாதுகாக்க அரசு முக்கியத்துவம் அளித்து செயல்படுவதாக குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

3. பீகாரில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு வன்முறையை ஒடுக்கி, வளர்ச்சியை உறுதி செய்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

4. தூய்மையான மற்றும் ஆரோக்கியமான இந்தியாவை உருவாக்க அனைவரும் இணைந்து செயலாற்ற வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. உலக துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ரவீந்தர் சிங் தங்கப்பதக்கம் வென்றார்.

- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, அங்கோலா மற்றும் போட்ஸ்வானா நாடுகளுக்கு ஆறுநாள் அரசு முறைப்பயணமாக இன்று புறப்பட்டு சென்றார்.

முதல்கட்டமாக இன்றிரவு அங்கோலா செல்லும் அவர், தமது பயணத்தின்போது அந்நாட்டு அதிபர் திரு **Joao Lorenco** -வுடன் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

அந்நாட்டின் **50-**ஆவது சுதந்திர தினத்தையொட்டி, அங்கோலா நாடாளுமன்றத்திலும் அவர் உரையாற்ற உள்ளார்.

பின்னர் **11-**ஆம் தேதி போட்ஸ்வானா செல்லும் குடியரசுத் தலைவர், அந்நாட்டு அதிபர் திரு **Duma Boko-**வுடன் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

போட்ஸ்வானா நாடாளுமன்றத்தில் உரையாற்றும் திருமதி திரௌபதி முர்மு, அங்குள்ள இந்திய சமுதாயத்தினருடனும் கலந்துரையாட உள்ளார்.

<<<<<<>>>>>>

கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை பாதுகாக்க அரசு முக்கியத்தும் அளித்து செயல்படுவதாக குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற சமண துறவி **Acharya Hansratna Surishwarji Maharaj** தொடர்பான நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய அவர், அமைதி, நல்லிணக்கம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, இரக்கம், நீடித்த வாழ்வியல் முறைகள் ஆகியவற்றை சமண மதம் ஊக்குவித்துள்ளதாக கூறினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு சமணத்துடன் தொடர்புடைய பிராக்கிருத மொழிக்கு செம்மொழி அந்தஸ்து வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் சமண மதம் பரவியிருந்ததாக கூறிய அவர், தமிழ் கலாச்சாரத்திலும் அது முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தியதாக குறிப்பிட்டார்.

திருக்குறளிலும், சங்க இலக்கியங்களிலும் சமணத்தின் தாக்கம் பெருமளவு உள்ளது என்று திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறினார்.

<<<<<<>>>>>>

பீகாரில் இரண்டாவது கட்ட சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் நாளை மாலையுடன் நிறைவடைய உள்ள நிலையில், அரசியல் கட்சித் தலைவர்களின் இறுதிக்கட்ட பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி **Bettiah**-கில் இன்று பிரச்சாரம் மேற்கொண்டார்.

பீகாரில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு வன்முறையை ஒடுக்கி, வளர்ச்சியை உறுதி செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

மத்தியிலும், மாநிலத்திலும் ஒரே கூட்டணி அரசு அமைந்துள்ளதால், மாநிலத்தில் வளர்ச்சியின் வேகம் அதிகரித்துள்ளது என்று அவர் கூறினார்.

முந்தைய காலங்களில் பீகாரில் வன்முறையும், சமூக விரோத செயல்களும் அதிகரித்து காணப்பட்டதாகவும், தற்போது அவை ஒடுக்கப்பட்டு அமைதி நிலைநாட்டப்பட்டுள்ளது என்றும் பிரதமர் தெரிவித்தார்.

பூர்ணியாவில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய பிஜேபி மூத்த தலைவரும், உள்துறை அமைச்சருமான திரு அமித் ஷா, தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில், பீகார் மாநிலம் முன்எப்போதும் இல்லாத வளர்ச்சியை எட்டியுள்ளதாக தெரிவித்தார்.

மோத்திஹரியில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய உத்தரப்பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், பீகாரின் தேசிய

ஜனநாயக கூட்டணி ஆட்சியில் நல்லாட்சிக்கான அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

**Jamui-**ல் நடைபெற்ற பிரச்சார பொதுக்கூட்டத்தில் பேசிய ராஷ்ட்ரிய ஜனதாதள தலைவர் திரு தேஜஸ்வி யாதவ், தங்களது கூட்டணி ஆட்சிக்கு வந்தால், வேலைவாய்ப்புகள் அதிகரிக்கப்படும் என்றார்.

தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்று அவர் உறுதியளித்தார்.

<<<<<<>>>>>>

பருவநிலை மாற்றத்தை கட்டுப்படுத்த வளர்ச்சியடைந்த நாடுகள் கார்பன் வெளியேற்றத்தை குறைப்பதில் உரிய கவனம் செலுத்த வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.

பிரேசிலில் நடைபெற்ற பருவநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் பேசிய அந்நாட்டுக்கான இந்திய தூதர் திரு தினேஷ் பாட்டியா, பாரிஸ் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டு பத்தாண்டுகள் ஆகியும், உலகளாவிய இலக்குகள் இதுவரை எட்டப்படவில்லை என்றார்.

இந்தியாவை பொறுத்தவரை குறித்த காலத்திற்கு முன்பே இலக்குகளை அடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவில் புதைபடிமம் அற்ற மின் உற்பத்தித்திறன் 50 சதவீதமாக அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தியாவில் காடுகளின் பரப்பளவை விரிவுபடுத்த நடவடிக்கை

எடுக்கப்பட்டுள்ளதாகவும், சர்வதேச சூரிய சக்தி கூட்டமைப்பு போன்ற முன் முயற்சிகளை இந்தியா தொடங்கியுள்ளது என்றும் திரு தினேஷ் பாட்டியா குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>

தூய்மையான மற்றும் ஆரோக்கியமான இந்தியாவை உருவாக்க அனைவரும் இணைந்து செயலாற்ற வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுதில்லியில் தகவல் ஒலிபரப்பு அமைச்சக அலுவலகத்தில் நடைபெற்ற தூய்மை இயக்கத்தில் இன்று அவர் பங்கேற்றார்.

அந்த அலுவலகத்தின் **Waves Bazar** பிரிவையும் அவர் தொடங்கிவைத்தார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட தூய்மை குறித்த கூட்டு உறுதிப்பாடு அவசியம் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்நிகழ்ச்சியில், தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் செயலாளர் திரு சஞ்சய் ஜாஜூ, கூடுதல் செயலாளர் திரு பிரபாத், இணைச்செயலாளர் திரு செந்தில் ராஜன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

<<<<<<>>>>>>

**Ernakulam — Bangaluru** இடையேயான வந்தேபாரத் ரயில் சேவையை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தொடங்கிவைத்த நிலையில், தமிழகத்தின் முக்கிய நகரங்கள் வழியாக இந்த ரயில் இயக்கப்படுவது பெரிதும் பயனளிக்கும் என்று சேலம் ரயில்வே கோட்ட ஆலோசனை குழு உறுப்பினர் திரு சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், மக்கள் மத்தியில் இதற்கு அதிக வரவேற்பு உள்ளதாக கூறினார்.

***(Voice Byte — சுப்பிரமணியன் - 37 Sec. )***

<<<<<<>>>>>>

உலகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள இந்தியத் தூதரகங்களில் 'வந்தே மாதரம் பாடல் இயற்றப்பட்டதன் ' 150ஆம் ஆண்டு விழா கொண்டாட்டம் நடைபெற்றது.

சிலி, கொலம்பியா, கனடா, அர்ஜென்டினா மற்றும் பெரு ஆகிய நாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்களில், மாணவர்கள் அங்குள்ள இந்தியர்களுடன் இணைந்து 'வந்தே மாதரம்' பாடலை பாடினர்.

இந்த நிகழ்வுகளில் அந்தந்த நாடுகளுக்கான இந்தியத் தூதர்கள் பங்கேற்று, சுதந்திரப் போராட்டத்தில் 'வந்தே மாதரம்' பாடலின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தனர்.

<<<<<<>>>>>>

தென் ஆப்பிரிக்காவில் நடைபெறவுள்ள ஜி20 உச்சி மாநாட்டில் அமெரிக்கா பங்கேற்காது என்று அந்நாட்டு அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், தென் ஆப்பிரிக்காவில் உள்ள சிறுபான்மை விவசாயிகள் நிற அடிப்படையில் பாகுபாடுடன் நடத்தப்படுவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

நிற அடிப்படையில் நடைபெறும் வன்முறைகளை கட்டுப்படுத்த தென்னாப்பிரிக்க அரசு தவறிவிட்டதாக அவர் கூறியுள்ளார்.

இதுபோன்ற மனித உரிமை மீறல் சம்பவங்கள் நிறுத்தப்படும் வரை தென் ஆப்பிரிக்காவுக்கு அமெரிக்கர்கள் செல்ல இயலாது என்றும், **2026** ஆம் ஆண்டு மியாமியில் நடைபெறும் ஜி**20** உச்சி மாநாட்டை ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாகவும் திரு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகம், கேரளா மற்றும் புதுச்சேரியின் சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கிழக்கு ராஜஸ்தான் மற்றும் மேற்கு மத்தியப்பிரதேசத்தின் சில இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கடும் குளிர் நிலவக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

இதனிடையே, தில்லியில் காற்று மாசு மோசமான நிலையிலேயே உள்ளதாக மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ரவீந்தர் சிங் தங்கப்பதக்கம் வென்றார்.

கெய்ரோவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 50 மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

-----------

இந்தியா ஏ அணிக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாளான இன்று 417 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிவரும் தென்னாப்பிரிக்க ஏ அணி இரண்டாவது இன்னிங்சின் ஆட்டநேர இறுதியில் விக்கெட் இழப்பின்றி 25 ரன் எடுத்துள்ளது.

பெங்களூருவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியா ஏ அணி இரண்டாவது இன்னிங்சில் 7 விக்கெட் இழப்பிற்கு 382 ரன் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை முடித்துக்கொள்வதாக அறிவித்தது.

இந்தியா ஏ அணி முதல் இன்னிங்சில் 255 ரன் எடுத்தது.

தென்னாப்பிரிக்கா ஏ அணி முதல் இன்னிங்சில் 221 ரன் எடுத்துள்ளது.

----------

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டுவென்டி - டிவென்டி கிரிக்கெட் போட்டித்தொடரை இந்தியா 2-1 என்ற ஆட்டக்கணக்கில் கைப்பற்றியது.

<<<<<<END>>>>>>